தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை: திரு. மு.மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப.(ஓ).,
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்.140/மா/2021**
**நாள். 08.02.2022**

திரு. கோ.கோவிந்தராஜ்,
சென்னை–600 083. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர், மண்டலம்–10,
சென்னை – எதிர் மனுதாரர்

சென்னை, அசோக் நகர், 22/43, 15வது தெரு, என்ற முகவரியில் வசிக்கும் திரு.கோ.கோவிந்தராஜ் என்பவரின் 13.07.2021 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 14.07.2021 அன்று பெறப்பட்டு 140/மா/2021 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சென்னை, அசோக் நகர், 22/43, 15வது தெரு, என்ற முகவரியில் வசிக்கும் திரு.கோ.கோவிந்தராஜ் என்பவர் தமது மனுவில், "நான் சென்னை மாநகராட்சி மண்டலம் 10 உதவி ஆணையர், 133 A.E. இவர்களுக்கு ஆக்கிரமிப்பு செய்யவுள்ளதை அகற்றக்கோரி கடந்த 04.08.2020 அன்று அளிக்கப்பட்ட புகாரின் மீது நீண்ட மாதங்களாக AE அவர்கள் நடவடிக்கை எடுக்காததால் முழுமையாக மாநகராட்சி நடைப்பாதையை ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும் அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் ஆக்கிரமிப்பு சம்மந்தமாக புகார் அளித்தால் நடவடிக்கை எடுப்பதில்லை என்று கூறியதாலும் ஆக்கிரமிப்பை அகற்றுவது சம்மந்தமாக மனுதாரராகிய என்னிடம் கையூட்டு கேட்டதால் கடந்த 16.04.2021 அன்று CM, மனித உரிமை ஆணையகம், Vigilance மற்றும் உயர் அதிகாரிகளுக்கு மனுக்கள் அனுப்பபட்டது. மாநகராட்சி உதவி ஆணையர் 19.04.2021 அன்று நேரடியாக அலுவலகத்தில் ஆஜராக Notice அளித்து விசாரித்தார். லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகள் Tamil Nadu Local Bodies Ombudsman, Guindy, Chennai-32ல் உள்ள அலுவலக அதிகாரிக்கு அளிக்கப்பட்டுள்ள Reply இம்மனுவுடன் இணைத்துள்ளேன். இப்படி இருக்கையிலும் இதுவரை ஆக்கிரமிப்பை அகற்றி பதில் அளிக்க மறுக்கிறார். ஆகவே ஐயா அவர்கள் நடவடிக்கை எடுக்க இம்மனுவை மேல்முறையீடு செய்கிறேன் " என்று தெரிவித்துள்ளார்.

2) இப்புகார் மனு தொடர்பான அறிக்கையை அனுப்புமாறு 16.07.2021 நாளிட்ட கடிதம் மூலம் மண்டல அலுவலர், மண்டலம்–10 அவர்களிடம் கோரப்பட்டது. ஆனால் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலரிடமிருந்து இது தொடர்பான அறிக்கை இம்முறைமன்றத்தில் பெறப்படவில்லை. முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 07.02.2022 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 27.01.2022 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3) மனுதாரர் திரு. கோ.கோவிந்தராஜ் 07.02.2022 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்ட தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

" பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10, அசோக் நகர், 10–வது அவென்யூ மெயின்ரோடு, 57வது தெரு, கதவு எண்.53 என்ற இடத்தில் மாநகராட்சி நடைபாதை மற்றும் சாலையை ஆக்கிரமித்து ராம்ப் (Ramp)அமைத்து நடைபாதை ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. இதனால், போக்குவரத்து பாதிக்கப்படுவதுடன், அருகில் உள்ள பள்ளிக்குச் செல்லும் சிறுமிகள் மற்றும் பொதுமக்கள் நடப்பதற்கு சிரமமாக உள்ளது. இது தொடர்பாக மாநகராட்சிக்கு பலமுறை புகார்கள் அளிக்கப்பட்டன. எனது புகாரின் மீது விசாரணையும் நடைபெற்றது. ஆனால், இதுவரை ஆக்கிரமிப்பு செய்து கட்டியுள்ள மேற்கண்ட Ramp –ஐ இன்னும் மாநகராட்சியால் எடுக்கப்படவில்லை. இந்நேர்வு தொடர்பான புகைப்பட ஆதாரங்களை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். மேலும் மாநகராட்சி இடத்தை ஆக்கிரமிப்பு செய்யும்பொருட்டு அங்கு செங்கல் ஜல்லி கொட்டி இடத்தை ஆக்கிரமித்துள்ளனர். இது தொடர்பாகவும் மாநகராட்சிக்கு புகார் அளிக்கப்பட்டும் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. ஆகவே, கையூட்டு கேட்டு தராததால், நடவடிக்கை எடுக்காத அதிகாரிகள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வருங்காலங்களில் சாட்சிகளை அழைத்து வருகிறேன். நடவடிக்கை எடுத்து துறைரீதியாக பதில் அளிக்கவும் " என தெரிவித்துள்ளார்.

4) சென்னை மாநகராட்சி உதவி செயற் பொறியாளர் 07.02.2022 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி பின்வரும் தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

" பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–10, அசோக் நகர் 10–வது அவென்யூ மெயின் ரோடு, 57–வது தெரு, கதவு எண்.53 என்ற இடத்தில் மாநகராட்சி நடைபாதை மற்றும் சாலையை தனியர் ஒருவர் ஆக்கிரமிப்பு செய்து ராம்ப் (Ramp) அமைத்துள்ளார். இது தொடர்பாக மேற்கண்ட மனுதாரரிடமிருந்து புகார்கள் வரப்பெற்றன. மேற்கண்ட சாலையில் TURIF நிதியில் நடைபாதைகளை மேம்படுத்த மாநகராட்சியால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. இன்னும் ஒரு மாத காலத்தில் இப்பணிகள் துவங்கும். எனவே, இன்னும் 1 ½ மாத காலத்தில் மேற்கண்ட நடைபாதை மேம்படுத்தப்பட்டு, நடைபாதை ஆக்கிரமிப்பு செய்து தனியாரால் அமைத்துள்ள Ramp அகற்றப்படும் என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன் " என கூறியுள்ளார்.

5) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் –10ஐச் சேர்ந்த உதவி செயற் பொறியாளர் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

பெரு நகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–10, அசோக் நகர் 10–வது அவென்யூவில், மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் தனி நபர் ஒருவரால் அவருக்கு சாதகமாக நடைபாதை(Ramp) அமைத்து சாலையை ஆக்கிரமிப்பு செய்துள்ளார். இது குறித்து மனுதாரரால் மாநகராட்சி 10–வது மண்டல அலுவலர், உதவி பொறியாளர் (AE) ஆகியோருக்கு 4.8.2020–ல் மனு அளித்துள்ளார். மனு அளித்தும் கடந்த இரண்டு ஆண்டுகாலமாக மனுதாரர் புகாரில் தெரிவிக்கப்பட்ட ஆக்கிரமிப்பை நேரில் சென்று பார்த்து ஆக்கிரமிப்பை அகற்ற மாநகராட்சி நிர்வாகம் எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல், மனுதாரரை நேரடி விசாரணைக்கு அழைத்திருப்பது ஏற்கக்கூடியது அல்ல இது அதிகாரிகளின் அலட்சிய போக்கையே காட்டுவதாக இம்முறை மன்ற நடுவம் கருதுகிறது. எனவே கடந்த இரண்டு ஆண்டுகாலமாக ஆக்கிரமிப்பை அகற்ற எந்தவித நடவடிக்கையும் எடுக்காத சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேலும் 07.02.2022 அன்றைய நேரடி விசாரணையின்போது உதவி செயற்பொறியாளர் தமது வாக்குமூலத்தில் உறுதி அளித்தவாறு (1 1/2 ) ஒன்றரை மாத காலத்தில் அனைத்து ஆக்கிரமிப்புகளையும் மற்றும் தனியரால் ஆக்கிரமிப்பு செய்துள்ள ராம்ப் (Ramp) –ஐ உரிய சட்ட விதிகளுக்குட்பட்டு உடனடியாக அகற்றி TURIF

நிதியின் கீழ் நடைபாதைகளை மேம்படுத்திட உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு மண்டல அலுவலர், மண்டலம்–10 அவர்களை இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்துகிறது.

2022 –ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள் 08–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. கோ.கோவிந்தராஜ்,
த/பெ. கோபால்,
எண்.22/43, 15–வது தெரு,
அசோக் நகர்,
சென்னை – 600 083.

2) மாநகராட்சி ஆணையாளர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை – 600 003.

3) மண்டல அலுவலர்,
மண்டலம் –10,
பெருநகர சென்னை மாநகராட்சி,
117, என்.எஸ்.கே.சாலை, கோடம்பாக்கம்,
சென்னை – 600 024.

4) கண்காணிப்பு பொறியாளர்,
மழைநீர் வடிகால் துறை,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை – 600 003.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
சென்னை–600 032

08/02/22
செயலாளர்